வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P 1632

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.12.2025 வியாழக்கிழமை இதழ் : 338 பக்கங்கள் : 08

## இலங்கையின் உணவு பாதுகாப்பு ஆபத்தில்!

### ஐ. நா., சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை

நியூயோர்க், டிசெம்பர் 04

டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து இலங்கையில் உணவுப் பாதுகாப்பு நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை, மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்துள்ளன.

15 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இப்போது உணவு பாதுகாப்பற்ற அபாய நிலையில் உள்ளனர். சுமார் 200 வீதிகள், 10 பாலங்கள் சேதமடைந்துள்ளன. இதனால், மரக்கறிகள், தானியங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சந்தைக்கு வருவது குறைந்துள்ளது.

15 முக்கிய பொருளாதார மையங்கள் கட்டமைப்பு சேதத்தைச் சந்தித்துள்ளன. அதிக பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் உள்ள பல்பொருள் அங்காடிகள் வரையறுக்கப்பட்ட திறனில் இயங்குகின்றன.

பெரும்போகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 5 இலட்சத்து 64 ஆயிரம் ஹெக்ரெயர் நெல் பயிர் உட்பட 6.7 இலட்சம் ஹெக்ரெயருக்கு மேற்பட்ட மரக்கறி பயிர்களும் அழிவடைந்துள்ளன. பயிர்கள் அழிவு, போக்குவரத்துத் தடையால் மரக்கறிகளின் விலைகள் 30 வீதம் முதல் 200 வீதம் வரை உயர்ந்துள்ளன.

வெள்ளத்தால் கோழிப் பண்ணைகள், மீன், இறால் பண்ணைகள், மற்றும் சிறிய மீன்பிடிப் படகுகள் கடுமையாகப் பாதிப்புகளை சந்தித்துள்ளன. இந்த சவால்கள் உணவு இருப்பை குறைத்துள்ளன - குடும்ப வருமானத்தைக்

07

## விமலுக்கு பிடியாணை



கொழும்பு, டிசெ. 04

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு கொழும்பு - கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றையதினம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வழக்கு ஒன்று தொடர்பாக நீதிமன்றத்தில் முற்படத் தவறியமையை அடுத்தே கோட்டை நீதிவான் நீதிமன்றம் இந்த பிடியாணை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஜனாதிபதி செயலகத்தால்

07

## நிவாரணம், மீட்பு பணிக்கு ஆதரவளிக்க ஐ. நா. தயார்!

### பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ்



நியூயோர்க், டிசெ. 04

பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது என்று அதன் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரது எக்ஸ் தளத்தில் இடுகையிட்ட பதிவில்,

"இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து மற்றும் மலேசியாவில் ஏற்பட்ட கடுமை யான வெள்ளம் மற்றும் மண் சரிவில் சிக்கி பெருமளவா னோர் உயிரிழந்தமை மிகுந்த கவலை தருகிறது. இந்தப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள். பாதிக்கப்பட்டோருடன் தோளோடு தோள் நிற்கிறோம். இந்த நாடுகளின் நிவாரணம் மற்றும் மீளக்கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறேன்", என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பேரிடர் பாதிப்புகள் தொடர்பில் உண்மைகளை வெளிப்படுத்துக

### அரசாங்கத்தை கோருகிறார் சுமந்திரன்



கொழும்பு, டிசெ. 04

டித்வா புயல் தாக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள், உயிரிழப்புகள் தொடர்பான உண்மைத்தன்மையை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும். முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் செயலை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது - இவ்வாறு

07

## புதிய வரவு - செலவு திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும்!

### எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, டிசெ. 04

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தற்போதுள்ள வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளில் திருத்தங்களைக் கொண்டு வந்து, புதிய வரவு - செலவுத் திட்டத்தை அவசரமாக அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

07

## 6 முதல் 9ஆம் திகதி வரை கனமழைக்கு வாய்ப்பு!

### மலையகத்தில் மண்சரிவு ஏற்படலாம்

**பேராசிரியர் பிரதீபராஜா எச்சரிக்கை**



யாழ்ப்பாணம், டிசெ. 04

எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நாடு முழுவதும் மிதமானது முதல் கன மழையும் கிடைக்க வாய்ப்புள்ளது. மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் சிறிய கனமழை பெய்தாலும்

07

## பாடத் திட்டங்களில் தமிழர் வரலாறு மறைக்கப்படுகிறது

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 04

கல்வி அமைச்சின் பாடத்திட்டங்களில் தமிழர் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. வரலாறு, சித்திரம் போன்ற பாடங்களில் தமிழ் மன்னர்களின் பெயர்கள், அக்கால

07

## வரலாற்று பாடத்தில் தமிழர் வரலாறு உள்ளடக்கப்படும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய உறுதி



கொழும்பு, டிசெ. 04

வரலாறு ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறதே தவிர, மாணவர்கள் மத்தியில் சிங்கள வரலாறு, தமிழ் வரலாறு என்று வேறுபடுத்தவில்லை. புதிய கல்வி மறுசீரமைப்பில் தமிழர் வரலாறு, தமிழ் மன்னர்களின் வரலாறுகள் பாடப் பரப்பில்

07

## பேரிடரில் இறந்தோருக்கு பாராளுமன்றில் அஞ்சலி!

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் ஏற்பட்ட பேரிடரில் உயிரிழந்தோருக்கு பாராளுமன்றில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா கயந்த கருணாதிலகவின் கோரிக்கைக்கு அமைவாக நேற்றைய தினம் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பேரிடரில் உயிரிழந்த மக்களுக்காக ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். (ஐ)

## புதிய நாட்டை கட்டியெழுப்ப இணைந்து செயல்பட தயார்

### செல்வம் அடைக்கலநாதன்



கொழும்பு, டிசெ. 03

இக்கட்டானநிலையில் நாட்டு மக்களுக்காக இரவிரவாகத் தூங்காது பணி செய்யும் ஒரு ஜனாதிபதியை இந்த நாடும் நாமும் பெற்றதற்காக பெருமகிழ்ச்சியடைகிறேன். அரசாங்கத்துடன் இணைந்து புதிய நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார்

07

## 114 குளங்கள் வவுனியாவில் உடைப்பெடுத்துள்ளன!

குமார. கோகுலன்

வவுனியா, டிசெ. 04

வவுனியாவில் பெய்த கனமழை மற்றும் புயல் தாக்கத்தால் 114 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் தொடர்ச்சியாக பெய்த மழையால் தாழ்நில பிரதேசங்களில் நீர்வரத்து அதிகரித்து குளங்களின் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைந்துள்ளது. இதனால் பல குளங்கள் வான் பாய்ந்ததுடன் 114 குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

இதனால், மக்களின் குடிமனைகள், விவசாய

07

## கொலைக்கு தயாராகவிருந்த மட்டு.வாசி கொழும்பில் கைது

கொழும்பு, டிசெ. 04

ஒருவரை சுட்டுக் கொலை செய்யவிருந்த நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைதான 36 வயதான நபர் முன்னர் விடுதலை புலிகள் அமைப்பிலும் பின்னர் கருணா குழுவிலும் இருந்தவர் என்றும் அவர் மட்டக்களப்பு - வாழைச்சேனையை சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த "கரந்தெனிய சுத்தா" என்று அறியப்பட்ட நபருக்காக கொலை ஒன்றைச் செய்யவிருந்த நிலையில் ரிவால்வர் துப்பாக்கியுடன் மீட்டியாகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்றும் கைதான நபர் கொள்ளை சம்பவம் ஒன்றுக்காக 11 வருடங்கள்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### டித்வா புயல் தாக்கம்:

## முல்லைத்தீவு மாவட்டத்தில் 21,863 குடும்பங்கள் பாதிப்பு!

முல்லைத்தீவு, டிசெ. 04

டித்வா புயலின் தாக்கத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 21 ஆயிரத்து 863 குடும்பங்களைச் சேர்ந்த 64 ஆயிரத்து 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

குளங்களில் நீர்வரத்து இன்னமும் இருப்பதுடன், தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் இன்னமும் தேங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 312 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 124 பேரும் கரைத்துறைப்பற்றில் 4 ஆயிரத்து 658 குடும்பங்களை சேர்ந்த 14 ஆயிரத்து 650 பேரும் ஒட்டுசுட்டானில் 5 ஆயிரத்து 443 குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்து 132 பேரும் புதுக்குடியிருப்பில் 5 ஆயிரத்து 476 குடும்பங்களை சேர்ந்த 15 ஆயிரத்து 395 பேரும் துணுக்காயில் 2 ஆயிரத்து 418 குடும்பங்களை சேர்ந்த 5 ஆயிரத்து 868 பேரும் மணலாறில் (வெலிஓயா) 2 ஆயிரத்து 556 குடும்பங்களை சேர்ந்த 6 ஆயிரத்து 932 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த 6 பிரதேச செயலர் பிரிவுகளையும் சேர்ந்த 3 ஆயிரத்து 872 குடும்பங்களை சேர்ந்த 11 ஆயிரத்து 184 பேர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். ஆயிரத்து 186 குடும்பங்களை சேர்ந்த 3 ஆயிரத்து 537 பேர் 40 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## விவசாய குடும்பத்தை சேர்ந்த மாணவர்க்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், டிசெ. 04

யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் புலமைப்பரிசில் நிதியத்தின் ஊடாக வருமானம் குறைந்த விவசாய குடும்பத்தை சேர்ந்த உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் புலமைப்பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் பி. தெய்வநாயகி தெரிவித்துள்ளார்.

தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தமக்குரிய கமநல சேவைகள் நிலையத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பெற்றோர் அங்கத்தவராகவுள்ள கமக்கார அமைப்பு, கிராம உத்தியோகத்தர், பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை உரிய கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கையளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

க. பொ. த. சாதாரண தரத்தில் விண்ணப்பதாரி பெற்ற பெறுபேறு, குடும்ப வருமானம், மீள்குடியமர்வு போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு, கமநல சேவைகள் நிலைய பிரிவு மட்டத்தில் புலமைப்பரிசிலுக்கு தகுதியான வர்கள் தெரிவு செய்யப்படுவர்.

விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட, பெற்றோரில் ஒருவரேனும் கமக்கார அமைப்பு ஒன்றில் உறுப்பினராக இருக்கும் 2027ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்களாவர். (ஐ)


## கற்சிலைமடு - பேராறு பாலம் கனரக வாகனம் செல்ல தடை

முல்லைத்தீவு, டிசெ. 04

கற்சிலைமடு பேராறு பாலத்தில் உடைவு ஏற்பட்டதால் கனரக வாகனங்கள் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கற்சிலைமடு பேராறு பகுதியில் அமைந்துள்ள பாலத்திலேயே உடைவு ஏற்பட்டுள்ளது.

டித்வா புயல் தாக்கத்தால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பைத் தொடர்ந்தே இந்தப் பாலம் நேற்று உடைவுற்றது என்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ஐ)



## கூட்டுறவு பெரியாரின் 61ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், டிசெ. 04

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 61ஆவது நினைவு தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் ப. கேசவதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான அகல்யா செகராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## கோழிப்பண்ணைகள் மூழ்கியதால் சுமார் ஏழு பில்லியன் ரூபா நட்டம்!

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக நாடு முழுவதும் உள்ள கோழிப் பண்ணைகளில் சுமார் 30 லட்சம் கோழிகள் உயிரிழந்ததால், உள்ளூர் முட்டை உற்பத்தியாளர்களுக்கு 7 பில்லியன் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்ரன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

இந்த பெரும் இழப்பின் காரணமாக, தற்போது முட்டையொன்றின் மொத்த விலை ரூ. 37 ஆகவும், சில்லறை விலை ரூ. 40 ஆகவும் உயர்ந்துள்ளது

அத்துடன், பண்டிகைக் காலத்தை நெருங்கும்போது, முட்டையொன்றின் மொத்த விலை ரூ. 45 ஆகவும், சில்லறை விலை ரூ. 50-ஐத் தாண்டியும் உயர்வதை தவிர்க்க முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

முட்டை உற்பத்தி செய்யும் பண்ணைகளில், தெதுரு ஓயாவை அண்மித்த பண்ணைகள் அதிக பட்ச சேதத்தை சந்தித்துள்ளதுடன், அங்கு இருந்த சுமார் 15 லட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

தாழ்நிலப் பகுதிகளில் உள்ள பண்ணைகளில் சுமார் 50 வீதம் அழிந்துள்ள நிலையில், அவிசாவளை சாலாவ பிரதேசப் பண்ணைகளில் சுமார் 7 இலட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த கோழிகளில் 70 வீதம் முட்டையிடும் நிலையில் இருந்தவை என்றும், 30 வீதம் முட்டையிடும் நிலையை அடையவிருந்தவை எனவும் அவர் தெரிவித்தார்.

தாய் கோழிகளில் 25,000 கோழிகள் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளன.

தற்போதுள்ள சூழலில், பண்ணைகளில் உயிருடன் உள்ள விலங்குகளிடையே நோய் பரவுவதைத் தடுக்க அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

## கடற்பாதை உபகரணங்கள் குறிகாட்டுவானுக்கு வந்தன

யாழ்ப்பாணம், டிசெ. 04

குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே புதிய கடற்பாதைக் கான உபகரணங்கள் நேற்றைய தினம் எடுத்துவரப்பட்டன.

குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கு கட்டடப் பொருட்கள், வாகனங்கள் என்பவற்றை கொண்டு செல்வதற்கு கடற்பாதை பயன்படுத்தப்பட்டது. இந்த நிலையில், முன்னர் சேவையில் இருந்த கடற்பாதை மூழ்கியதை யடுத்து நயினாதீவு மக்கள் பொரு ட்களை கொண்டு செல்வதில் பெரும் இடர்களை எதிர்நோக் கினர்.

இந்த நிலையில், கடற்பாதை சேவையை மீண்டும் ஆரம்பிக்க பல தரப்பினரிடமும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய கடற்பாதைக்கான உபகரணங்கள் கனரக வாகனங்கள் மூலம் குறிகாட்டுவானுக்கு எடுத்துவரப்பட்டன. இவற்றை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நேற்று நேரில் பார்வையிட்டார். (ஐ)

## வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உதவி பொருட்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி, டிசெ. 04

டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. வடமராட்சி கிழக்கு இளை ஞர்களின் ஏற்பாட்டில் யகத் துஷியா என்பவரின் நிதி பங்களிப்பில் 40இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இவ்வாறு அத் தியாவசிய பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-08)

## பல்கலைக்கழகங்களில் பீடாதிபதி தெரிவை மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்த முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 04

நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் மறு அறிவித்தல் வரை பீடாதிபதிகள் தெரிவுக்கான தேர்தல்களை நடாத்துவதில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நேற்று புதன்கிழமை நடந்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட் டுள்ளதுடன், நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் மறுஅறிவித்தல் வரை பீடாதிபதி தெரிவுக்கான தேர்தல்களை நடத்த வேண்டாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி, மறுஅறிவித்தல் வரை பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள் தெரிவுக்காக ஆரம்பிக்கப்பட்ட பணிகளை உடனடியாகக் கைவிடுவதுடன், தற்போது பதவியிலுள்ள பீடாதிபதிகள் மற்றும் துறைத்தலைவர்களின் பதவிக்காலம் நிறைவுக்கு வருமாயின், அவர்களையே பதில் கடமை ஆற்றும் வகையில் இந்த நிலைமாறுகாலப் பகுதிக்கு நியமிக்குமாறும் பல்கலைக்கழகப் பேரவைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 49ஆம் பிரிவில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள திருத்தச்சட்ட வரைவின் அடிப்படையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் நிர்வாக பணிகளில் ஈடுபடுவதை மேலும் விரிவாக்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

## வல்வெட்டித்துறை மக்களிடம் உதவி பொருட்கள் சேகரிப்பு!



வடமராட்சி, டிசெ. 04

டித்வா புயல் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு, மத்திய மாகாண மக்களுக்கு வழங்குவதற்காக வல்வெட்டித்துறையில் உலருணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

வல்வை ஒன்றியத்தால் வல்வெட்டித்துறை நகர சபை முன்னாள் தவிசாளர் சுரேன் தலைமையில் நேற்றைய தினம் இந்த உணவுப் பொருட்கள் சேகரிக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை மக்கள் உணவுப் பொருட்கள் மற்றும் பண உதவிகளை இதன்போது வழங்கி வைத்தனர். (ஐ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.12.2023 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# காலத்தை தவறவிட்டால்...!

மீண்டும் நாடு நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. சூறாவளியின் பொருளாதார சுமை மிகவும் அதிகம். வேலியிலிருந்து விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாகவே நாட்டின் நிலை காணப்படுகிறது. நிலைமைகளை சமாளிக்கக்கூடிய நிலையில் இலங்கையின் பொருளாதாரம் இருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்திருக்கிறார். ஆனால், முன்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட சுமைகளிலிருந்தே மக்கள் இன்னும் மீளவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பல இலட்சம் வாக்குகளை இழந்தது. இப்போது, சுமை இரட்டிப்பாகியிருக்கிறது. நாட்டின் உட்கட்டமைப்பு மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. விவசாயம் பெரியளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது கேள்வி - இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்கு செல்வது பற்றிச் சிந்திக்காது. தமிழ் கட்சிகள் வழமைபோல் அரசாங்கம் சர்வாதிகாரமாக நடந்து கொள்கிறது என்றவாறு சத்தங்களைப் போடலாம். ஆனால், நாட்டின் நிலைமையைக் காரணம் காண்பித்துத் தேர்தலை பிற்போடுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் இலகுவாக தன்வசப்படுத்திக்கொள்ளும். மாகாண சபைகள் தேர்தல் ஒன்றுக்கு செல்வது தொடர்பில் அரசாங்கம் பெரியளவில் ஆர்வம் கொண்டிருந்ததா என்னும் கேள்வி ஏற்கனவே இருந்த ஒன்றுதான்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, மாகாண சபைகள் தேர்தலை நடத்துவதற்கான சாதகமான நிலைமையிருந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசி காலத்தை விரயம் செய்தது. இறுதியில் புதிய அரசியல் யாப்பும் இல்லை. மாகாண சபைகளும் இல்லை என்னும் நிலையில் தமிழர் அரசியல் முடிவுற்றது. இன்றும் தங்களின் தவறுகளுக்கு பொறுப்புக்கூறுவதற்கு தமிழ்த் தேசிய தலைமைகள் என்போர் தயாராக இல்லை.

அரசாங்கம் தொடர்பில் பேசுவதற்கு பிரத்தியேக அறிவு தேவையில்லை. இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையைத் தீர்க்கவில்லை என்னும் களநிலைமைதான் தமிழ் மக்களுக்கான தனித்துவமான அரசியலுக்கான தேவையைத் தொடர்ந்தும் தக்கவைத்தது. தமிழ்த் தேசிய இனப்பிரச்னை என்பது சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தின் விளைவுதான் என்பதில் எங்களுக்குத் தெளிவிருந்தால் பின்னர் எதற்காக அரசாங்கம் தொடர்பில் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

அரசாங்கங்கள் தவறு என்பதாலும் அந்த அரசாங்கங்களுக்கு உள்ள நெருக்கடியை - அரசியல் நிர்ப்பந்தங்களை - ஒருவேளை நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தித் தமிழ் மக்களுக்கான உரிமைகளை நிலைநாட்டுவதற்குத்தானே தமிழ் மக்களுக்கென்று ஒரு தலைமை (தலைமைகள்) தேவைப்படுகிறது. நிலைமை இவ்வாறிருக்கின்றபோது, வாய்ப்புகளை தவறிவிட்டுவிட்டு அரசாங்கங்கள் தொடர்பில் பேசுவதில் என்ன அர்த்தமுண்டு?

இந்தப் பின்புலத்தில் அரசாங்கங்கள் தர மறுப்பதை ஒவ்வொரு சூழலிலும் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்திப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதும் - அதற்கான இராஜதந்திர நகர்வுகளில் ஈடுபடுவதற்கும்தான் தமிழ்க் கட்சிகள் தேவை. ஆனால், தமிழ் தலைமைகள் என்போரோ வாய்ப்புகளை கணிக்கத் தெரியாமல் - கிடைக்கும் வாய்ப்புகள் ஒவ்வொன்றையும் தவறவிட்டுவிட்டு அரசாங்கங்கள் தொடர்பில் பேசிக் கொண்டிருப்பதையே தமிழர் அரசியல் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்கள், அவர்கள் என்ன நிறத்தில் இருந்தாலும் அவர்கள் ஆட்சியாளர்கள்தான். அவர்கள் தமிழர்கள் எதிர்பார்க்கும் அனைத்தையும் தட்டில் போட்டு வழங்கப் போவதில்லை. ஓர் அரசாங்கத்தின் கீழ் மாகாண சபைகள் தேர்தலுக்கான சூழலை கையாளத் தவறியதால் இப்போது இன்னோர் ஆட்சியின் கீழ் அதற்கான வாய்ப்பைப் பெற முடியாதுள்ளது.

# பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு உதவ பல நாடுகள் கைகோப்பு!

கொழும்பு, டிசெ. 04

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவை அடுத்து இலங்கைக்கு தொடர்ந்து சர்வதேச மனிதாபிமான ஆதரவு கிடைத்து வருவதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மீட்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதால், நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் ஒற்றுமையை வெளிப்படுத்தி அவசரகால நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

உடனடி அவசரகால மீட்பு முயற்சிகளில் இந்தியா முன்னணிப் பங்காற்றியுள்ளது.

இந்திய கடற்படை மற்றும் வான் படைகள் ஏற்கனவே அவசரகால பொருட்களை வழங்கியுள்ளன. மேலும் கூடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உலக உணவுத் திட்டம், அமெரிக்கா, சீனா, ரஷ்யா என்பனவும் தமது பங்காற்றலை வெளிப்படுத்தியுள்ளன.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், மாலைதீவு, சுவிட்ஸர்லாந்து, ஜப்பான், ஐக்கிய அரபு இராச்சியம் என்பனவும் தமது உதவிகளை வழங்கி வருவதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர துருக்கி, கியூபா, பங்களாதேஷ், ஐரோப்பிய ஒன்றியம், பாலஸ்தீனம், நிகரகுவா மற்றும் ஏனைய நாடுகளும் இலங்கைக்கு உதவ முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உறைந்த காய்கறிகள் இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் நிலவும் இயற்கை அனர்த்த நிலை காரணமாக உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் சுற்றுலாத்துறை மற்றும் விருந்தகங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக முக்கியமான முடிவொன்று எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்தின் தரங்களுக்கு இணங்க, எதிர்வரும் 2 மாதங்களுக்குத் தேவையான உறைந்த காய்கறிகளை தட்டுப்பாடு இல்லாமல் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற உணவுப் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், சுற்றுலாத் துறையில் உள்ள விருந்தகங்கள் மற்றும் தொடர்புடைய துறைகளுக்கான உணவுப் பொருட்களைத் தடையின்றி வழங்குவது உறுதிப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சிக்கலில் 39 ரயில்கள்!

கொழும்பு, டிசெ. 04

அவசர அனர்த்த நிலைமை காரணமாக, 39 ரயில்களைச் சேவைக்காக மீண்டும் கொழும்புக்குக் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், அலுவலக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்தினம் ரம்புக்கனை, பொல்கஹவெல, குருநாகல், கண்டி, சிலாபம், புத்தளம் மற்றும் கணேவத்தை ஆகிய தொடருந்து நிலையங்களுக்குச் சென்ற 39 ரயில் தொகுதிகளே சிக்குண்டுள்ளன.

ரயில் பாதைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதால் இவற்றை மீண்டும் கொழும்புக்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், தற்போதைய பயணிகள் நெரிசலுக்கு ஏற்றவாறு ரயில் சேவைகளை முன்னெடுப்பது மிகவும் கடினமான காரியமாக மாறியுள்ளதாக, இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கத் துரித நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 04

பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காக நட்டஈட்டை வழங்குவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த விவசாயம் மற்றும் காப்பீட்டுச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.


நாடு முழுவதும் நிலவிய அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட மற்றும் வெள்ள நிலைமைகள் காரணமாக பல ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையிலேயே விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டங்களை வழங்குவதற்கு விவசாயம் மற்றும் காப்பீட்டு சபை தீர்மானித்துள்ளது.

இதன்படி, கட்டாயக் காப்பீட்டின் கீழ் உள்ள பயிர்களான நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் மற்றும் சோயா, அவரை ஆகிய பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து நட்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சேதம் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் பிரச்சினைகளுக்கான ஆலோசனைகளுக்காக விவசாய காப்பீட்டு சபையின் அவசர அழைப்பு இலக்கமான 1928 மூலமாகவும் விவசாயிகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 04 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - கார்த்திகை 18
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
ராசிக்கு சந்திரன் இருப்பதாலும் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**இடபம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மிதுனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமை உணர்வுடன் செயல்படுவார்கள். உங்கள் திறமை வெளிப்படும். மதிப்புக் கூடும் நாள்.

**கடகம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த அலைச்சல் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவுபெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் ஏற்படும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். வியாபாரத்தில் மறைமுகப்பிரச்சினைகள்வரும் கவனம்தேவைப்படும்

**துலாம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடிவடையும்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளை செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**தனுசு**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சிந்தனை திறன் வெளிப்படும் நாள்.

**மகரம்**
பழைய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளிடம் மதிப்பு அதிகரிக்கும். நல்லன நடக்கும் நாள்.

# தொற்று நோய் பரவலைக் கட்டுப்படுத்த புதுக்குடியிருப்பில் சுத்தப்படுத்தும் பணி

முல்லைத்தீவு, டிசெ. 04

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், சிவில் பாதுகாப்பு படையினர், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, பிரதேச சபையினர் இணைந்து புதுக்குடியிருப்பு நகர் பகுதியை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் நேற்றுக் காலை ஈடுபட்டனர்.

சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாக மழை கிடைக்கப் பெற்றதனால் மழை வெள்ளம் அதிகம் தேங்கியுள்ளதுடன், வீதிகளில் குப்பைகளும் தேங்கியுள்ளன. இதனால் ஏற்படும் எலிக்காய்ச்சல், டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்களின் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரின் ஒருங்கிணைப்பில் புதுக்குடியிருப்பு சிவில் பாதுகாப்பு படையினர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினருடன் இணைந்து நகரை சுத்தப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுத்தப்படுத்தும் நடவடிக்கையானது புதுக்குடியிருப்பு தொடக்கம் ,இரணைப்பாலை, மாத்தளன் வரையான வீதி, புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு நகர் பகுதிகளை அண்டிய பகுதியில் துப்பரவு செய்யும் பணி இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## மன்னார் நீர் விநியோகம் பாதுகாப்பானது!

மன்னார், டிசெ. 04

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ள நிலையால், மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் மாசுபட்டுள்ளது என்ற பொய்யான செய்தி சமூக வலைத்தளங்களில் பரவி வருவதாக மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்த தகவல் முழுவதும் வதந்தி என மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் பாதுகாப்பான குழாய் கிணறுகளில் இருந்து பெறப்படுவதாகவும், இந்த நீர்மூலங்கள் மேற்பரப்பு வெள்ளத்தால் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

தங்களின் ஆய்வக பிரிவு தொடர்ச்சியாக நீர் தரத்தை பரிசோதித்து மன்னார் மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் பாதுகாப்பானது மற்றும் குடிப்பதற்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்தி வருவதனால், பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் எனவும், வதந்திகளை நம்ப வேண்டாம் எனவும் மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

(அ)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூ.25,000!

கொழும்பு, டிசெ. 0.4

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி நிதியத்திலிருந்து 25,000 ரூபாவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

## நாயாறு பாலம் புனரமைப்பு ஆரம்பம்!

முல்லைத்தீவு, டிசெ. 04

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் முற்றிலுமாக சேதமடைந்த முல்லைத்தீவு பிரதான நாயாறு பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இலங்கை இராணுவத்தினரின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ளப்பெருக்கு காரணமாக முல்லைத்தீவில் உள்ள பிரதான நாயாறு பாலம் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

பாலம் இடிந்து விழுந்ததன் விளைவாக, முல்லைத்தீவிலிருந்து வெலி ஓயா, திருகோணமலை, கொக்கிளாய் ஆகிய பகுதிகளுக்கு யணிக்கும் அனைத்து போக்குவரத்தும் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவம் மேலும் கூறியது.

(அ)

# பெருவெள்ளம் அள்ளி சென்ற மாடுகள் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கின!

மன்னார், டிசெ. 04

மன்னார் - சௌத்பார் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கிய மாடுகளை மன்னார் நகர சபை மீட்டு புதைத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன. இந்த நிலையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட ஒரு தொகுதி கால்நடைகள் கடலுக்குள் சென்ற நிலையில் குறித்த கால்நடைகள் உயிரிழந்த நிலையில் சௌத்பார் கடற்கரையில் கரையொதுங்கின.

இந்த நிலையில் அப்பகுதியில் பாரிய துர்நாற்றம் வீசியதையடுத்து, மன்னார் நகர சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்டதோடு, நகர சபை பணியாளர்களின் உதவியுடன் கரையொதுங்கிய மாடுகள் மீட்கப்பட்டு கடற்கரை பகுதியில் பாரிய பள்ளம் தோண்டப்பட்டு புதைக்கப்பட்டன.

(அ)

# மன்னாரில் ஆடு, மாட்டு இறைச்சி விற்பனை தடை

மன்னார், டிசெ.04

மன்னார் மாவட்டத்தில் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை ஆடு மற்றும் மாடு இறைச்சி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளதா, மன்னார் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் அதிகமான கால்நடைகள் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழந்த ஆடு, மாடுகளை இறைச்சியாக்கி மன்னார் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் மிருக வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைவாக நேற்று முதல் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஆடு மற்றும் மாட்டு இறைச்சி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


உத்தரவை மீறி ஆடு மற்றும் மாடு இறைச்சிக்காக வெட்டி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இவ்விடயம் தொடர்பாக பொதுமக்கள் விழிப்புடன் செயற்படுமாறும் மறு அறிவித்தல் கிடைக்கும் வரை ஆடு மற்றும் மாட்டு இறைச்சிகளை கொள்வனவு செய்ய வேண்டாம் எனவும் மாவட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஆதரவை தீவிரப்படுத்தும் இந்தியா!

## மருத்துவ பணியாளர் குழு வந்தது





கொழும்பு, டிசெ. 04

**டித்வா சூறாவளியின் பேரழிவைத் தொடர்ந்து, இலங்கைக்கான மனிதாபிமான ஆதரவை இந்தியா தீவிரப்படுத்தி வருகிறது.**

அதன் ஒரு பகுதியாக ஒப்ரேஷன் சாகர் பந்துவின் கீழ் தற்காலிக கள மருத்துவமனை, 70 இற்கும் மேற்பட்ட மருத்துவ மற்றும் துணைப் பணியாளர்கள் மற்றும் மீட்பு வாகனங்களுடன் கூடிய இந்திய விமானப் படையின் சி-17 போக்குவரத்து விமானம் கொழும்பில் நேற்று தரையிறங்கியது.

ஆக்ராவிலிருந்து 73 மருத்துவ நிபுணர்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய சி-17 விமானம் மாலையில் கொழும்பில் தரையிறங்கியது.

இதனை தனது எக்ஸ் கணக்கில் தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இலங்கையின் வெள்ள நிவாரண முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், இந்திய விமானப் படையின் சி-17 ஹெலிகொப்டர்கள் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகளைத் தொடர்ந்தன. (அ)

# சாரதி அனுமதிப்பத்திர கணினி முறைமை மீண்டும் வழமைக்கு!

கொழும்பு, டிசெ. 04

சீரற்ற வானிலை காரணமாக தடைப்பட்டிருந்த சாரதி அனுமதிப்பத்திரக் கணினி முறைமை தற்போது முழுமையாகச் சீர் செய்யப்பட்டுள்ளதாகவும் நாட்டின் அனைத்துப் பிரதேச அலுவலகங்களிலும் எந்தவிதமான சாரதி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் உள்ளிட்ட அனைத்துச் சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வேரஹெர பிரதான அலுவலகம் உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் சாரதி அனுமதிப்பத்திர அச்சிடல் உள்ளிட்ட அனைத்துச் சேவைகளும் நேற்று முதல் வழமைபோல இடம்பெறும் என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# கடுவலை-பத்தரமுல்லை வீதி நேற்று மீளவும் திறப்பு!

கொழும்பு, டிசெ. 04

அண்மைய வெள்ளப்பெருக்கு காரணமாக மூடப்பட்டிருந்த கடுவலையில் இருந்து பத்தரமுல்லை வரையிலான வீதி, பொதுப் போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவு இந்த தகவலை உறுதிபடுத்தியுள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக, கடுவலை நகரம் முற்றிலுமாக நீரில் மூழ்கியது.

இதற்கிடையில், மோசமான வானிலை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியிருந்த அத்துருகிரிய நுழைவாயில் நேற்று முன் தினம் மீண்டும் திறக்கப்பட்டது.

அதன்படி, அந்த நுழைவாயில் வழியாக பயணம் செய்வது இப்போது மீண்டும் சாத்தியமாகும் என்று பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# ஐக்கிய அரபு இராச்சியத்தின் 2ஆவது மனிதாபிமான உதவி

கொழும்பு, டிசெ. 04

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இரண்டாவது உதவிப் பொருட்களை ஏற்றிய ஐக்கிய அரபு இராச்சிய விமானப்படையின் நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்தது.

இந்த உதவியை ஐக்கிய அரபு இராச்சிய நிவாரணக் குழுவின் தலைவர் கலாநிதி ஹமூத் அல் அபாரி உத்தியோகபூர்வமாக கையளித்தார். இலங்கையின் சார்பாக தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க மற்றும் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு ஆகியோர் உதவிப் பொருட்களை பொறுப்பேற்றனர்.

இந்த உதவிப் பொருட்களிடையே ஒரு குடும்பத்துக்கு 10 நாட்களுக்கு போதுமான ஆயிரத்து 116 உலர் உணவுப் பொதிகள் மற்றும் தண்ணீர்ப் போத்தல்கள், கூடாரங்கள், போர்வைகள், மெத்தைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் அடங்கிய 336 நிவாரணப் பொதிகள் என்பன அடங்கும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் முதலாவது உதவித் தொகை நேற்று முன்தினம் காலை நாட்டை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ்ப்பாணம் உள்ளிட்ட 22 மாவட்டங்கள் "தேசிய இடரால் பாதிப்புற்ற பிரதேசங்கள்"

கொழும்பு, டிசெ. 04

நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களைத் தொடர்ந்து, தேசிய அனர்த்தத்திற்கு உள்ளான பிரதேசங்களை அறிவித்து வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மரணங்களைப் பதிவு செய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 9 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபனினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, "டித்வா" சூறாவளியின் தாக்கத்தினால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட 22 நிர்வாக மாவட்டங்கள் தேசிய அனர்த்தத்துக்கு உள்ளான பிரதேசங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன.

அவை பின்வருமாறு:-

கண்டி, நுவரெலியா, பதுளை, குருநாகல், மாத்தளை, கேகாலை, கம்பஹா, முல்லைத்தீவு, அநுராதபுரம், கொழும்பு, யாழ்ப்பாணம், பொலனறுவை, மன்னார், புத்தளம், இரத்தினபுரி, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா, களுத்துறை.

(அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் நடைபெறும் மீட்புப் பணிகளில் தாமதம்!

## பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளில் தொலைத்தொடர்பு, வங்கி சேவை செயலிழப்பு

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் மலையகத்தின் பெரும்பாலான பகுதிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மத்திய மாகாணத்தில் கண்டி, நுவரெலியா, பதுளை மற்றும் மாத்தளை மாவட்டங்களில் ஏனைய மாவட்டங்களை விட அதிகளவான உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன.

நேற்று முன் தினம் மாலை வரை கண்டியில் 118 பேரும், பதுளையில் 83 பேரும், நுவரெலியாவில் 89 பேரும் உயிரிழந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன், கண்டியில் 171 பேரும், நுவரெலியாவில் 73 பேரும், பதுளையில் 28 பேரும் காணாமல்போயுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் மண்சரிவு ஏற்பட்ட சில பகுதிகளில் மீட்புப் பணிகளை முன்னெடுப்பதில் தற்போது வரை கடும் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள குழுக்கள் தெரிவித்துள்ளன.

எனவே அந்தப் பிரதேசங்களில் உயிரிழந்தவர்கள், காணாமல் போனோர் தொடர்பில் துல்லியமான தரவுகளையும் பெற முடியாமல் இருப்பதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக நாவலப்பிட்டி, தொலஸ்பாகை, உலப்பனை, பரகல, மடுல்சீமை, ஹங்குராங்கெத்த, இறம்பொடை, தலவலதென்னை, றாகல, மாத்தளை மற்றும் கொத்மலை - ரம்பொடகம, போன்ற பல பிரதேசங்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் பெரும்பாலான பிரதேசங்களில் நேற்றிரவு வரை தொலைத்தொடர்புகளும் வழமைக்குத் திரும்பவில்லை.

இதனால், அங்கு உதவிகள் தேவைப்படுவோருக்கு அவற்றை வழங்குவதிலும் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பாலான வங்கிகளில் உள்ள தானியக்க பணம் வழங்கும் இயந்திரங்கள் செயலிழந்துள்ள நிலையில், வங்கிகளிலிருந்து பணத்தை எடுப்பதிலும் அங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாதிக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் வலையமைப்புகள் இன்று சீரடையும்!

கொழும்பு, டிசெ. 04

அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நாட்டின் தொலைபேசி மற்றும் இணையத் தொடர்பு வலையமைப்பை இன்றளவில் முழுமையாக சீரமைக்க முடியும் என டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் பொருளாதார அமைச்சு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு மற்றும் அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்கள் என்பன இதற்காக கடுமையாக உழைத்து வருவதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக 11 மாவட்டங்களில் பைபர் வலையமைப்புகள் துண்டிக்கப்பட்டன.

எமது அமைச்சின் நேரடி தலையீட்டால் 09 இடங்களை 24 மணி நேரத்திற்குள் சீரமைக்க நடவடிக்கை எடுத்தோம்.

தற்போது, அனைத்து மாகாணங்களையும் இணைப்பதன் மூலம் தொலைத்தொடர்பு செயல்முறை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சில இடைப்பட்ட பிரதேசங்களைத் தவிர, ஏனைய இடங்களில் பைபர் வலையமைப்பின் ஊடாக தொடர்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் ஏற்பட்ட மின்சாரத் தடை மற்றும் பைபர் துண்டிப்பு காரணமாக 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதான மின்மாற்றி கோபுரங்கள் செயலிழந்தன.

இதுவரை, அவற்றில் சுமார் 2 ஆயிரத்து 800 கோபுரங்கள் மீளச் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள 949 கோபுரங்கள் மின் தடை காரணமாக செயலிழந்துள்ளன.

எஞ்சிய அனைத்து இடங்களையும் சீரமைக்க தொலைத்தொடர்பு நிறுவனங்கள் துரிதமாக செயல்பட்டு வருகின்றன.

தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான மின்சார வசதிகளை வழங்க முப்படைகள் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றன-என்றார். (அ)

# 387,964 நீர்விநியோக இணைப்புகள் இதுவரை சீர் செய்யப்படவில்லை!

கொழும்பு, டிசெ. 04

அண்மைய நாட்களில் மண்சரிவு மற்றும் வெள்ளம் காரணமாக துண்டிக்கப்பட்ட மொத்தம் 387,964 வீட்டு நீர் விநியோக இணைப்புகள் இதுவரை மீட்டெடுக்கப்படவில்லை.

நாடு முழுவதும் உள்ள 2,947,833 நீர் விநியோக இணைப்புகளில், கணிசமான பகுதி பேரிடர் சூழ்நிலை காரணமாக சேதமடைந்தது.

கண்டி மாவட்டத்தில் சுமார் 66 வீத நீர் விநியோக இணைப்புகள் இன்னும் மீட்டெடுக்கப்படவில்லை.

மேலும், கேகாலை மாவட்டத்தில் 75.09 வீதம், குருநாகல் மாவட்டத்தில் 41.34 வீதம் மற்றும் புத்தளம் மாவட்டத்தில் 52.82 வீத இணைப்புகள் இன்னும் மீட்டெடுக்கப்படவில்லை என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஜெனரல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நுவரெலியாவில் 89 பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 04

சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 89 பேர் உயிரிழந்துள்ளதுடன், 73 பேர் காணாமல் போயுள்ளனர் என மாவட்டச் செயலாளர் துஷாரி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 6,959 குடும்பங்களைச் சேர்ந்த 24,681 பேர் இந்த பேரிடரில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் 2,934 குடும்பங்களைச் சேர்ந்த 11,453 பேர் மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 123 தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# ஆறு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 6 மாவட்டங்களுக்குத் தொடர்ந்தும் மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, பதுளை மாவட்டத்தில், பதுளை, ஹப்புத்தளை, ஹாலிஎல, கந்தகெட்டிய, பசறை, மீகஹகிவுல, ஊவ பரணகம, வெலிமட, லுணுகலை, எல்ல, பண்டாரவளை, சொரணாதோட்டை மற்றும் ஹல்துமுல்ல ஆகிய பிரிவுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தில், உடபலாத, கங்கவட்ட கோரளை, உடுதும்புர, தொழுவ, மினிபே, பாததேஹவாஹெட்ட, மெததும்புர, தெல்தோட்டை, அக்குரணை, கங்க இஹல கோரளை, பாததும்புர, யட்டிநுவர, தும்பனே, உடுநுவர, ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய, பஸ்பாகே கோரளை, பன்வில, ஹதரலியத்த மற்றும் குண்டசாலை ஆகிய பிரிவுகளுக்கும்,

கேகாலை மாவட்டத்தில், மாவனெல்லை, ரம்புக்கனை, அரநாயக்க, புளத்கொஹூபிட்டிய, கலிகமுவ, கேகாலை, யட்டியாந்தோட்டை, தெஹியோவிட்ட, ருவன்வெல்ல, வரக்காபொல மற்றும் தெரணியகல ஆகிய பிரிவுகளுக்கும்,

குருநாகல் மாவட்டத்தில், ரிதிகம, மாவத்தகம, மல்லவபிட்டிய, நாரம்மல, அலவ்வ மற்றும் பொல்கஹவெல ஆகிய பிரிவுகளுக்கும்,

மாத்தளை மாவட்டத்தில் நாவுல, ரத்தோட்டை, அம்பன்கங்க கோரளை, உக்குவளை, வில்கமுவ, யட்டவத்த, மாத்தளை, பல்லேபொல மற்றும் லக்கல - பல்லேகம ஆகிய பிரிவுகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில், வலப்பனை, ஹங்குரன்கெத்த, நில்தண்டாஹின்ன, மத்துரட்ட, நுவரெலியா, கொத்மலை மேற்கு, கொத்மலை கிழக்கு, அம்பகமுவ, தலவாக்கலை மற்றும் நோர்வூட் ஆகிய பகுதிகளுக்கும் மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு, கம்பஹா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு முதலாம் மட்ட மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# 95 வீதிகளுக்கு இன்னும் தடை!

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வீதிகளில் இன்னும் 95 வீதிகள் தடைப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த வீதிகளை சுத்தம் செய்யும் பணிகள் அடுத்த சில நாட்களுக்குள் நிறைவடையும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் விமல் கண்டம்பி தெரிவித்தார்.

அனர்த்த நிலைமை காரணமாக மொத்தம் 256 வீதிகள் பாதிக்கப்பட்டிருந்தன. பொறியியல் குழுக்கள் சேதங்களைச் சரி செய்வதிலும் தடைகளை அகற்றுவதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

மேலும் அனர்த்தம் காரணமாக 20 பாலங்களும் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)



# தமிழர் சமூக ஜனநாயக கட்சி உதவி

திருமலை, டிசெ. 04

திருகோணமலை மாவட்டத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் சமூக ஜனநாயக கட்சி உதவி வழங்கியுள்ளது.

மூதூர், வெருகல் பிரதேசத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்குவதற்காக உப்புவெளி பிரதேச சபையிடம் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை திருகோணமலை மாவட்ட தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் மாவட்ட செயலாளர் தோழர் சின்னமோகன், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் க. ஓங்காரன் ஆகியோர் வழங்கினர்.

(அ)

# மட்டக்களப்பில் வெள்ளத்தால் அழிந்துபோன வயல் நிலங்கள்

மட்டக்களப்பு, டிசெ. 04

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் இம்முறை மேற்கொள்ளப்பட்டிருந்த பெரும்போக வேளாண்மைச் செய்கையில் ஆயிரக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு போயுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வெல்லாவெளி கமநல கேந்திர நிலையத்திற்குட்பட்ட வேத்துச்சேனை, வட்டவளை, நாதனைவெளி, ஒட்டடிமுன்மாரி உள்ளிட்ட பல வயற்கண்டங்களில் பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்கள் வெள்ளத்தில் அள்ளுண்டு முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வயல்வெளிகள் அனைத்தும் உடைப்பெடுத்து மீதமுள்ள நெல்நாற்றுக்கள் மண்ணுக்குள் புதையுண்டுள்ள இந்நிலையில் விவசாயிகள் உடைப்பெடுத்துள்ள வரம்புகளை திருத்தி சீரமைத்து வருகின்றனர்.

வெள்ள நீர் வடிந்து கொண்டிருக்கின்ற இந்நிலையில் வயல் பாதிப்புகள் தொடர்பில் தற்போதைய நிலையில் தொலைபேசி இணைப்புக்கள் சீராக கிடைக்கப்பெறாத போதும், விவசாய அமைப்புக்களூடாக பாதிப்பின் நிலவரங்கள் தொடர்பில் தரவுகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை மோற்கொண்டுள்ளதாகவும், அப்பகுதி பெரும்போக அபிவிருத்தி உத்தியோகத் தர் தெரிவித்தார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமலுக்கு...

தேசிய சுதந்திர முன்னணிக்கு வழங்கப்பட்ட 40 அரச வாகனங்களை தவறாகப் பயன்படுத்தியதன் மூலம் அரசாங்கத்துக்கு 90 இலட்சம் ரூபாய் இழப்பை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு விசாரணையில் முற்படத் தவறியமைக்காகவே அவருக்கு பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கையின்...

குறைத்துள்ளன. அத்துடன், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், குழந்தைகள், கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் மத்தியில் மனிதாபிமான உதவியை சார்ந்திருப்பதை அதிகரித்துள்ளது.

மேலும், விவசாய உள்ளீடுகளை மீட்டெடுத்தல், விநியோகப் பாதைகளைச் சீரமைத்தல், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் உற்பத்தியைத் தொடங்க உதவுவதன் மூலம் அடுத்த வாரங்களில் நிலைமை மேலும் மோசமடைவதை தடுக்க முடியும் என்றும் அந்த அமைப்புகள் எச்சரித்துள்ளன. (அ-ஐ)

## பேரிடர்...

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பேரிடரால் பாதிக்கப்பட்ட களுவாஞ்சிக்குடி மக்களுக்கு இரா. சாணக்கியன் எம். பியின் ஏற்பாட்டில் நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

மலையகத்துக்கு சென்றபோது பரிதாபகரமான சம்பவங்கள் தொடர்பில் அறிந்து கொண்டோம். சில இடங்களில் முழுக் கிராமமுமே புதையுண்டன. அந்த நேரத்தில் வீடுகளில் இல்லாத சிலர் தப்பிப் பிழைத்துள்ளனர். அங்கிருந்த ஒருவர் தனது முழுக்குடும்பமும் புதையுண்டதாகவும் மீட்பு நடவடிக்கைகளுக்கு யாரும் வரவில்லை என்றும் எப்படியாவது தமது குடும்பத்தினரின் உடல்களை மீட்கவேண்டும் என்பதற்காக மூன்று நாட்களாக போராடிவருவதாகவும் தெரிவித்தார். அங்கு சிலர் தமது பணத்தைக் கொடுத்து இயந்திரங்கள் மூலம் தேடுதல் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) கண்டி அரசாங்க அதிபரை சந்தித்தபோது கம்பளையில் 19 பேர்தான் உயிரிழந்தனர் என்று சொல்கிறார். நாங்கள் சென்ற முதல் இடத்திலேயே 26 உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. இன்னும் 50இற்கும் மேற்பட்டவர்கள் புதையுண்டுள்ளனர் என்று கிராம மக்கள் கூறுகின்றனர். இவ்வாறு பல கிராமங்கள் பேரழிவுக்கு உள்ளாகியுள்ளன. அந்த பகுதிகளில் மக்கள் மீளவும் வாழமுடியாத வகையில் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

பதுளை, நுவரெலியா மாவட்டங்களில் பெரும் இழப்புகள் ஏற்பட்டமையை எங்களால் காணமுடிந்தது. எம்மைக் கண்டதும் அங்குள்ள மக்கள் தமது கஷ்டங்களை கண்ணீருடன் கூறினர். அந்தப் பகுதியில் உடனடி நிவாரணப்பணிகள் முன்னெடுக்கப்படாதது மக்கள் மூலம் அறியமுடிந்தது. இதனை நாங்கள் கூறவேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. அரசாங்கத்தை குறை சொல்வதற்காக சொல்லவில்லை. மக்களுக்கு உடனடி நிவாரணங்கள் சென்றடையவேண்டும். மக்களின் உயிரிழப்புகள் எத்தனை என்று தெளிவாகத் தெரிய வேண்டும் - என்றார்.

## புதிய வரவு...

பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், வெள்ளிக்கிழமை (நாளை) வரவு - செலவு திட்டத்தை நிறைவேற்ற முன்பாக முன்வைக்கப்பட்டுள்ள தற்போதைய வரவு - செலவுத் திட்டம் பேரிடருக்குப் பிந்தைய நாட்டின் நிலைமைக்கு ஏற்றதா என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த இக்கட்டான கட்டத்தில், பாதிக்கப்பட்ட 15 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் குறித்து பார்த்து மேலும் சில நாட்களை எடுத்து, குறுகிய காலத்தில் புதிய வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும் பேரிடரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்பும் முகமான வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பதே தற்சமயம் செய்ய வேண்டிய பணியாக அமைந்து காணப்படுகின்றன.

மேலும் தாமதிக்காமல், இந்தப் பெரும் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அவசரமாக வரவு - செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும். மேலும் சில நாட்களை எடுத்து புதிய வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்ட வேண்டும். அரசாங்கத்தால் அந்த மாநாட்டைக் கூட்ட முடியாவிட்டால் அரசாங்கத்தின் சார்பாக எதிர்க்கட்சி இதனைக் கூட்டி நாட்டுக்குத் தேவையான நிதிகளைத் திரட்டித் தருகிறோம்.

டித்வா சூறாவளி தாக்கத்தால் உயிர்களை இழந்த அனைவருக்குமாக - தமது சொத்துகளை - வாழ்வாதாரங்களை இழந்து - இடம்பெயர்ந்து, சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ள அனைவருக்குமாக தேசிய துக்க தினத்தை பிரகடனப்படுத்த வேண்டும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## 6 முதல்...

(30- 40 மி. மீ. என்றாலும்) நிலச்சரிவு ஏற்படும். எனவே, இந்த பகுதி மக்களும் - அங்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருப்போரும் இது குறித்து கவனமாக இருக்கவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை தலைவரும் காலநிலை அவதானிப்பாளருமான நா. பிரதீபராஜா எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்றைய தினம் அவர் விடுத்த காலநிலை அவதானிப்பு அறிக்கையின் பிரகாரம்,

இன்று முதல் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மத்திய மாகாணங்களில் மிதமான மழை பெய்யும். கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நாளை வெள்ளிக்கிழமை வரை கனமழை பெய்யும். இதேசமயம், வடக்கு, மத்திய மாகாணங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

நாடு முழுவதும் 6, 7ஆம் திகதிகளில் பல இடங்களில் மிதமானது முதல் கனமழை பெய்யும். மன்னார், அநுராதபுரம், புத்தளம், கண்டி, நுவரெலியா, கொழும்பு, கம்பஹா, இரத்னபுரி, கேகாலை, களுத்துறை, காலி, பதுளை மாவட்டங்களின் பல பகுதிகளில் கனமழை பெய்யும் சாத்தியம் காணப்படுகிறது.

8ஆம் திகதி வட மத்திய, மத்திய, கிழக்கு மாகாணங்களிலும் பதுளை மாவட்டங்களிலும் கனமழையும் வட மாகாணத்தின் சில பகுதிகளில் மிதமான மழையும் பெய்யும். நாடு முழுவதும் எதிர்வரும் 9ஆம் திகதி வரை மிதமானது முதல் கனமழை வரை எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் 10ஆம் திகதி மிதமான மழை பெய்யும். இது, வடமேற்கு பருவமழை காலம் என்பதால் நாட்டின் பல இடங்களில் அடிக்கடி மிதமானது முதல் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

எனினும், அடுத்த 07 நாட்களுக்கு கடுமையான வானிலை ஏற்பட சாத்தியம் இல்லாததால் மழை பெய்தாலும் மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை. எனினும், புயலால் ஏற்கனவே கனமழை பெய்ததால் ஆறுகளில் நீர் நிலைகள் உயர்ந்து, குளங்கள் நிரம்பி, மண் ஈரமாகி, நுவரெலியா, கண்டி, பதுளை, கேகாலை, இரத்தினபுரி மாவட்டங்களில் சிறிய கனமழை பெய்தாலும் (குறைந்தது 30-40 மி.மீ. என்றாலும்) நிலச்சரிவு ஏற்படும். எனவே, இந்த பகுதிகளில் உள்ள மக்கள் இது குறித்துக் கவனமாக இருக்க வேண்டும். மத்திய, ஊவா சப்ரகமுவ மாகாணங்களில் உள்ளவர்கள் குறிப்பாக அடுத்த 6, 7, 8, 9 ஆகிய திகதிகளில் கவன மாக இருக்க வேண்டும். இந்த மாவட்டங்களில் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுபவர்களும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் - என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஐ)

## 114 குளங்கள்...

நிலங்களில் வெள்ளம் புகுந்தது. இதனால் மக்கள் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். உடைப்பெடுத்த 114 குளங்களில் 33 குளங்களின் அணைகளை இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுவதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஏனைய குளங்களின் கட்டுமான பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வரலாற்று...

உள்ளடக்கப்படும் - என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றில் சிறீதரன் எம். பியின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதமாகவே கல்வி அமைச்சரான பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், 10 ஆம் தரத்தில் 7ஆவது பாடத்தில் யாழ்ப்பாணம், வன்னியர்கள் தொடர்பில் பந்தி பிரிக்கப்பட்டும் அதேபோல் 10 ஆம் தரத்தில் 10ஆவது பாடத்தில் யாழ்ப்பாண இராஜதானி தொடர்பான பந்தி வேறுபடுத்தப்பட்டுள்ளதுடன் அதில் சங்கிலி மன்னன் இராச்சியம் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புதிய கல்வி சீர்திருத்தத்தில் தரம் 6இற்கான பாடப் பரப்பில் சங்கிலி மன்னன் தொடர்பான வரலாறு மற்றும் மன்னனின் அரச மாளிகை தொடர்பான படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வரலாறு ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறதே தவிர, மாணவர்கள் மத்தியில் சிங்கள வரலாறு, தமிழ் வரலாறு என்று வேறுபடுத்திக் கற்பிக்கப்படவில்லை.

இலங்கையின் வரலாற்றை பாதுகாத்தல், காட்சிப்படுத்துவதற்காக தேசிய தொல்லியல் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய தமிழில் வரலாறு மேம்பாட்டுக்கான விசேட நடவடிக்கைகளை இந்தத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கொழும்பு தேசிய நூதன சாலையில் தமிழ் வரலாறு தொடர்பான காட்சிப்படுத்தலும் உள்ளன. இந்திய மன்னர்களான இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன் உட்பட தமிழ் அரசர்களின் வரலாறுகளையும் இவை பிரதிபலிக்கின்றன.

இதேபோல், யாழ்ப்பாண இராச்சியத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தேசிய நூதன சாலையில் பாதுகாக்கப்படுகின்றன.

சங்க காலம், மற்றும் சோழ, பாண்டிய காலங்களில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தொடர்பில் பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி, செனரத் விக்கிரமசிங்க ஆகியோரால் படைக்கப்பட்ட நூலும் தேசிய நூதனசாலையில் பாதுகாக்கப்படுகிறது - என்றார். (ஐ)

## பாடத்திட்டங்களில்...

இலச்சினைகள், கல்வெட்டுகள், திட்டமிட்டே மறைக்கப்பட்டுள்ளன. புதிய கல்வி சீர்த்திருத்தத்தில் இந்த தவறு திருத்தப்படுமா என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் எம். பி. கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரியவிடமே அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

மேலும், இலங்கையில் சிங்கள மக்களைப்போல் தமிழர்களும் வரலாற்று அடிப்படைகளைக் கொண்ட - இந்த மண்ணுக்கு பூர்வீகமான சொந்த உரித்துக் கொண்ட தேசிய இனம். விஜயனும் தோழர்களும் இந்த நாட்டுக்கு வரும் முதலே பஞ்ச ஈச்சரங்களுடன் நாகர்களாக, இயக்கர்களாக தமிழர்கள் ஈழத்து மண்ணில் வாழ்ந்து வந்தார்கள் என்பதை மகாவம்சம் முதல் ஆய்வாளர்கள் வரை குறிப்பிடுகிறார்கள்.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இந்த மண்ணை கைப்பற்றி அதிகார ஆட்சி செய்தபோதும் தமிழர்கள் தீரத்துடன் அவர்களுக்கு எதிராகப் போராடியுள்ளார்கள். குறிப்பாக, வடக்கு - கிழக்கு மண்ணில் அரசுகள் அமைத்து சங்கிலியன், பண்டாரவன்னியன், பரராஜசேகரன் போன்ற மன்னர்கள் தீரத்துடன் தாயக தேசத்துக்காகப் போராடியுள்ளனர்.

நல்லநாச்சி போன்ற பெண் சிற்றரசர்களும் இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடித் தங்களை அர்ப்பணித்தவர்கள். 1920ஆம் ஆண்டுக்கு பின்னர் அநகாரிக தர்மபால, டி. பி. ஜாவா போல ஆறுமுகநாவலரும் சைவத்தையும், தமிழையும் பாதுகாக்கவும் - வளர்க்கவும் போராடியுள்ளார். கல்வி அமைச்சின் பாடத்திட்டங்களில் தமிழர் வரலாறு திட்டமிட்டே மறைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

கடந்த யுத்த காலங்களை பயன்படுத்தி சங்கிலியன், பண்டாரவன்னியன், நல்லநாச்சி, எல்லாளன் போன்ற தமிழ் மன்னர்களின் வரலாறுகள் இல்லாதழிக்கப்பட்டுள்ளதை அமைச்சர் அறிவாரா? இலங்கையின் விடுதலைக்காகத் தீரத்துடன் போராடிய தமிழ் மன்னர்களின் வரலாறு பாட நூல்களில் உட்புகுத்தப்படுமா? கல்வித் திட்டத்தில் வரலாற்றுப் பகுதியில் தமிழர் வரலாற்றுக்குரிய தனி அங்கீகாரம் வழங்குவதில் என்ன தடை இருக்கிறது?

தமிழர் வரலாற்றின் இலச்சினைகள், கல்வெட்டுகள், ஓலைகள் இந்தநாட்டில் பாதுகாப்பாக பேணப்படுகின்றனவா? சங்கிலியன், பண்டாரவன்னியன் நல்லநாச்சி, எல்லாளன் போன்ற மன்னர்களின் வரலாறுகளை தமிழ், வரலாறு, சித்திரப் பாடங்களில் இருப்பதற்கு தங்களால் உறுதிப்பாடு தரமுடியுமா? - என்றார். (ஐ)

## புதிய நாட்டை...

- இவ்வாறு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன் எம். பி.தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

இயற்கை அனர்த்தத்துக்கு அரசாங்கத்தை குற்றஞ்சாட்ட முடியாது. தற்போதைய நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீளலாம் என்ற ஆலோசனைகளை அனைவரும் முன்வைக்க வேண்டும். அரசாங்கத்தை விமர்சிக்கும் நேரம் இதுவல்ல. ஜனாதிபதிக்கு நான் நன்றி கூறுகிறேன். இரவு - பகலாக அவர் முழு மூச்சாக செயல்படுகிறார். அவருக்கும் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எமது அயல் நாடான இந்தியாவுடன் அரசாங்கம் இணக்கமாகவே செயல்பட வேண்டும். இந்தியாதான் எங்களுக்கு முதலில் உதவி செய்யும் நாடு. எனவே இந்தியாவின் கரத்தை இறுகப் பிடிப்பதுதான் எமது நாட்டுக்கு நல்லது.

அனர்த்தம் ஒன்று ஏற்படும்போது 100 வீதம் ஒரு வேலையை பூரணமாக செய்ய முடியாது. ஒருசில குறைகள் இருக்கும். எனவே, அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்ளவேண்டும். இயற்கை அனர்த்தத்தால் பேரழிவு ஏற்பட்டுள்ளது. ஆகவே, குறைகளை மாத்திரம் குறிப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கான ஆலோசனைகளை முன்வையுங்கள்.

அரசாங்கத்துடன் இணைந்து புதிய நாட்டை கட்டியெழுப்ப நாங்கள் தயார் - என்றார். (ஐ)

## கொலைக்கு...

காலி சிறையிலிருந்தபோது சுத்தாவுடன் அறிமுகமானார் எனவும் இருவரும் தொடர்ந்து தொலைபேசி மூலம் உரையாடி வந்தமையையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வடக்கு மக்களின் உடனடி தேவை பட்டியலைக் கோரியது இந்தியா!

## ஆளுநரை சந்தித்து துணைத் தூதுவர் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 04

**உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அடிக்கடி நிகழக்கூடிய இடர்பாதிப்புகளைத் தணிப்பதற்கான நிரந்தரக் கட்டமைப்பை இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது போன்று இங்கும் உருவாக்குவதற்கான உதவிகளையும் எதிர்காலத்தில் வழங்க முடியும் என இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய் முரளி வடக்கு மாகாண ஆளுநரிடம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாணத்தின் ஆளுநர் நா.வேதநாயகனை ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அதன்போது, பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மூன்று கட்டங்களில் வழங்க இந்திய அரசாங்கம் தயாராக இருப்பதாக கூறிய துணைத் தூதுவர் சாய்முரளி,

உடனடி உதவிகள் (நிவாரணம்), மீள்கட்டுமான உதவிகள் (வாழ்வைக் கட்டியெழுப்புதல்), நிரந்தரத் தயார்ப்படுத்தல் (எதிர்கால இடர்களை எதிர்கொள்ளல்).

வடக்கு மாகாண மக்களுக்கான தற்போதைய உடனடித் தேவைகளின் பட்டியலை வழங்கினால், உதவிகளை விரைந்து வழங்க முடியும்.

அழிவடைந்த உட்கட்டுமானங்களின் சேதவிவரங்களையும் வழங்குங்கள்.

உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அடிக்கடி நிகழக்கூடிய இத்தகைய இடர்பாதிப்புகளைத் தணிப்பதற்கான நிரந்தரக் கட்டமைப்பை இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது போன்று இங்கும் உருவாக்குவதற்கான உதவிகளையும் எதிர்காலத்தில் வழங்க முடியும்-என்றார்.

அதற்கு பேரிடர்களின்போது எப்போதும் முதலாவதாக கைகொடுப்பது இந்தியாதான் என்று குறிப்பிட்ட ஆளுநர், அதற்காக மாகாண மக்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களும் கூடுதலான அழிவுகளையும், அதிக உட்கட்டுமான அழிவுகளையும் எதிர்கொண்டுள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

இறங்குதுறைகள், போக்குவரத்து வீதிகள், பாலங்கள், சிறிய மற்றும் நடுத்தர குளங்கள் என பல்வேறு உட்கட்டுமானங்கள் அழிவடைந்துள்ள விவரங்களை அவர் முன்வைத்தார்.

வெள்ளம் தற்போது வடியத் தொடங்கியுள்ள நிலையில் மக்கள் முகாம்களிலிருந்து படிப்படியாக வீடுகளுக்குத் திரும்புகின்றனர். பாதிக்கப்பட்ட இந்த மக்களுக்காக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் உதவிகள் தொடர்பாகவும், மக்களின் வாழ்வாதாரம் சில இடங்களில் அடியோடு அழிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

பேரிடரின்போது இந்தியாவால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பிலும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் துணைத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

தினமும் நிவாரணப் பொருள்களுடன் விமானங்கள் வருகின்றமையையும், மருத்துவக் குழுக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்புகளும் கொழும்பை வந்தடைந்துள்ளமை தொடர்பாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 20 பாலங்கள் முற்றாக சேதம்!

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் 20 பாலங்கள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் அவற்றை சீரமைக்க 190 பில்லியன் ரூபா தேவை எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தர்மலிங்கம் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார். (அ)

# 215 பாரிய மண்சரிவு அனர்த்தங்கள் பதிவு!

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் கடந்த சில தினங்களாக 215 பாரிய மண்சரிவு அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை, கேகாலை, மொனறாகலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே மேற்படி பாரிய அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், சிறு அளவிலான மண்சரிவு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (அ)

# பேரிடர் தொடர்பில் அலட்சியம் செய்த அரசுக்கு எதிராக குற்றவியல் வழக்கு!

## எதிரணி எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் தற்போது ஏற்பட்ட பேரிடர் நிலைமை தொடர்பாக அரசாங்கத்துக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடர உள்ளதாக எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, குறித்த பேரிடர் நிலைமை 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதல்களைப் போன்று தீவிரமான சம்பவம் என அவர் சுட்டிக்காட்டினார்.

ராஜபக்ஷக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்கைப் போன்று, தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகவும் வழக்கு தொடரவுள்ளதாக மரிக்கார் கூறியுள்ளார்.

பேரிடரில் உயிரிழந்த ஒவ்வொரு பிரஜைக்கும் அவர்கள் பொறுப்பு கூறவேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

பேரிடர் குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமைக்காக வழக்கு தொடரப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் மரிக்கார் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

# பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளில் மின்துண்டிப்பு இல்லை

## இலங்கை மின்சார சபை அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 04

நாட்டில் தற்போது நிலவும் அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மின் பாவனையாளர்களின் வீடுகளில் மின் துண்டிப்பு எதனையும் மேற்கொள்ளப் போவதில்லை என இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர், மின் பொறியியலாளர் ஷெர்லி குமார அறிவித்துள்ளார்.

மின் கட்டணம் செலுத்தப்படாமைக்காக இந்த மாதத்தில் எந்தவொரு துண்டிப்பும் மின்சார சபையினால் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும், செலுத்தப்பட வேண்டிய கட்டணம் அடுத்த மாதங்களில் உரிய கட்டணத்துடன் சேர்க்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

மேலும், பல பாதிக்கப்பட்ட பகுதிகளில் மானி வாசிப்புகள் மற்றும் மின் கட்டணப் பட்டியல்கள் விநியோகிப்பது சாத்தியமில்லை என்று சுட்டிக்காட்டிய அவர், அந்தக் கட்டணப் பட்டியல்கள் அடுத்த மாதங்களில் பாவனையாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# இலங்கைக்கு பாகிஸ்தான் மனிதாபிமான உதவிகள்!

## கடல் மார்க்கமாக நிவாரணப் பொருட்கள்

கொழும்பு, டிசெ. 04

அண்மைய இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதாகப் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

"எமது இலங்கை சகோதர சகோதரிகளை ஆதரிப்பதற்காக அவசரமாகத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளை நாம் உடனடியாக அனுப்பி வைக்கிறோம். இந்தச் சேதத்திலிருந்து இலங்கை மீண்டு வரும்போது, எங்களால் முடிந்த உதவிகளைத் தொடர்ந்து வழங்குவோம்," என அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் மாலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலை அடுத்து பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் இந்த நிவாரண உதவியை அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், அழிவுகரமான "டித்வா" புயலைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நிவாரண முயற்சிகளை ஆதரிக்கும் வகையில், 200 தொன் மனிதாபிமான உதவிகளைப் பாகிஸ்தான் கடல் மார்க்கமாக இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

# மன்னாரில் வெள்ள இடர் நிலைமையை நேரில் பார்வையிட்டார் வடக்கு ஆளுநர்!

மன்னார், டிசெ. 04

சமீபத்தில் ஏற்பட்ட புயலின் தாக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சேத நிலைமையை நேரடியாக மதிப்பீடு செய்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மன்னார் மாவட்டத்துக்கு களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அதன்போது ஆளுநர், நானாட்டான் பிரதேச செயலத்துக்குட்பட்ட அறுகம்குன்று, மடுக்கரை உள்ளிட்ட அதிகளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மக்களின் நிலை குறித்து நேரில் அறிந்துகொண்டார்.

வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகள், குடிதண்ணீர் மற்றும் மின்சாரம் தொடர்பான சிக்கல்கள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் அவரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டன.



பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் உரையாடிய ஆளுநர், தேவையான நிவாரண உபகரணங்கள் மற்றும் உடனடி உதவிகளை வேகமாக வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மன்னார் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவான மற்றும் பயனுள்ள உதவிகளை வழங்க அரசாங்கம் முழு ஆதரவு வழங்கும் என ஆளுநர் உறுதியளித்தார். (அ)

# நயினாதீவில் உள்ள ஜெனரேட்டர் பழுது!

## மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 04

நயினாதீவுக்கு மின்சாரம் வழங்கும் ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளது.

ஜெனரேட்டர் ஒன்று பழுதடைந்துள்ளதால் தற்போது சிறிய ஜெனரேட்டர் மூலமே மின்சாரம் வழங்கப்படுவதனால், பொதுமக்கள் தங்கள் மின் பாவனையை சிக்கனமாக பாவிக்குமாறு இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

குறிப்பாக இரவு 12:00 மணியிலிருந்து அதிகாலை 05:00மணி வரையும் தேவையற்ற மின் பாவனைகளை குறைத்து ஒத்துழைக்கும் பட்சத்தில் மின்சாரம் தொடர்ந்து வழங்க முடியும் என மின்சார சபையினர் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.